திரு. சோ. கருணாநிதன்: தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் கால்நடைப் பராமரிப்பு விவரம் அடங்கிய நூல்களைக் கால்நடை வைத்திருப்பவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப் படுமா?

(பதில் இல்லை)

Building for Arkonam Municipal Office

*379 Q. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether the Public Works Department has undertaken the construction of the Office Buildings for the Arakonam Municipality; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) அரக்கோணம் நகராட்சிக்கான கட்டடம் இன்னும் தொடங்கப் படவில்லை. ஆனால் அதற்குரிய வரைபடமும், மதிப்பிட்ட அளவுகளும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகத்தில் தயாரிப்பில் உள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த ஆபீஸ் கட்டட வேலைகள் முடிந்து விட்டனவா? ஆபீஸ் வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, கட்டடத்திற்கான வேலைகளை தொடங்கவில்லை என்று பதிலிறுத்தேன். நகராட்சி மன்றத்தில் ரூ. 3,80,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டடம் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை வைத்தார்கள். அதற்குப் பிற்கு 19-12-1969 அன்று தீர்மானத்தில், இந்தத் தொகை அதிகமாக இருப்பதால், நகராட்சி மன்றம், ரூ 2 லட்சம் அளவில் திட்டம் தயாரித்தது. அது கட்டடப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த நிலையில் நகராட்சியில் 3.44 லட்சம் ரூபாய் பற்றாக்குறை இருப்பதால், மூலதனச் செலவைக் குறைக்க ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. கட்டட வரை படங்கள் வந்த பிறகு அரசு ஆணை பிறப்பிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, அரக்கோணம் நகராட்சிக்கு அலுவலகம் கட்டுவது பற்றியது. அதுபற்றித் துணைக் கேள்வி கேட்கவேண்டும், திரு. நரசிம்மன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் திட்டத்தை ஏற்று, அதைப் பொது பணித்துறை ஏற்று நிறைவேற்றும்போது, அதற்குப் பொதுப்பணித் துறை ஸெண்டேஜ் போடுகிறார்கள். அதைத் தவிர்த்து, அந்தத் திட்டத்திற்காக ஆகும் நிகரச் செலவை மட்டும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1970 மார்ச் 14]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அது ஒரு கொள்கைப் பிரச்சினை.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, அரக்கோணம் நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு, அந்த நகராட்சியின் நிதி நிலை பற்றுக்குறையாக இருப்பதால், மூலதனச் செலவைக் குறைத்துக்கொள்ள யோசனை சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நகராட்சிக்கு அலுவலகக் கட்டடம் அவசியம். ஆகவே, அரசாங்கம் அரக்கோணம் நகராட்சிக்குத் தனி உதவி கொடுத்து கட்டடத்தைக் கட்ட முன்வருமா?

மாண்புமிகு மா. முத்துசாமி : பற்றுக்குறை நிலை சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறதே தவிர, இதனால் வேலைகள் தடைபட வேண்டும் என்று கட்டளை இல்லை. நகராட்சி மன்றத்திற்குக் கட்டடமும் அவசியம்; நிதி வருவாயும் அவசியம்தான்.

Vriddhachalam Municipality

* 380 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) Whether the Government have decided to convert Virddhachalam Panchayat into a municipality ; and

(*b*) If so, for what reasons and from which date?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1970-ஆம் ஆண்டு சனவரி 17-ம் நாளில் இருந்து விருத்தாசலம் பேரூராட்சி நகராட்சியாக அமைக்கப் பெற்றிருக்கின்றது.

(இ) ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாறுவதற்கு சட்டத்தில் குறிப்பிட்ட தகுதிகளை விருத்தாசலம் பேரூராட்சி பெற்றிருந்த படியாலும், விருத்தாசலம் பேரூராட்சியும், விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியமும் விருத்தாசலம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்குத் தீர்மானித்தபடியாலும் விருத்தாசலம் ஒரு நகராட்சியாக மாற்றப்பெற்றது.

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக ஆக வேண்டுமென்றால், ஒரு சில விதிகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விதிகளுக்கு இணங்க விருத்தாசலம் முனிசிபாலிட்டி அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முனிசிபாலிட்டிக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கிறதா ? 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறதா ? அல்லது இரண்டும் சேர்ந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, விதிகள் என்ன என்பதை உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இருபது ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையும், ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட வருமானமும் உடையதாக விருத்தசாலம் பேரூராட்சி இருப்பதாலே, அது நகராட்சியாக மாற்றப் பெற்றது.